தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – எழுத்தாளர் திரு.மணவை முஸ்தபா படைப்புகளை நாட்டுடைமையாக்கல் – அவருக்கு பரிவுத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை

அரசாணை (நிலை) எண்.101

நாள்: 31.03.2010
திருவள்ளுவராண்டு 2041
பங்குனி 17

படிக்க:

1. திரு. மணவை முஸ்தபா அவர்களின் மனு நாள் 10.03.2010
2. தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.தமிழ்1/1419/2010, நாள் 15.3.2010

========

ஆணை:-

திரு. மணவை முஸ்தபா முதலாவதாகப் படிக்கப்பட்ட மனுவில் அவரது படைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை வேண்டியிருந்தார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அறிவியல் தமிழ் எழுத்தாளர் திரு.மணவை முஸ்தபா அவர்கள் 15.6.1935–இல் திண்டுக்கல் மாவட்டம் பிலாத்து கிராமத்தில் பிறந்தவர் என்றும், தற்போது 75 வயதாகும் இவர் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழில் தொடர்ந்து படைப்புகளை படைத்து வருகிறார் என்றும், மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம், கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி ஆகிய நூல்களுக்கு பரிசுகள் பெற்றுள்ளார் என்றும், அதேபோன்று கலைமாமணி விருது, திரு.வி.க.விருது, வளர் தமிழ்ச் செல்வர் எனப்பல விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்றவர் என்றும், சிறந்த எழுத்தாளராகத் திகழும் இவர் அறிவியல் கலைச்சொல் அகராதி தொகுதி–1 மற்றும் தொகுதி–2, மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம், கணினிக் களஞ்சிய அகராதி உட்பட 30–க்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்துத் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்துள்ளார் என்றும், தமிழ் செம்மொழி என அறிவிக்கப்பட வேண்டுமென பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர் ஆவார் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், அவர் தமது அறிக்கையில், மாண்பமிகு முதலமைச்சர் அவர்கள், இவரை அறிவியல் தமிழ் மன்றத்தின் தலைவராகவும் நியமித்தார்கள் என்றும், இவர் 14.9.2006 முதல் 30.6.2009 வரை அறிவியல் தமிழ் மன்றத்தின் தலைவராக பணியாற்றினார் என்றும், அறிவியல் தமிழுக்கு அவரது படைப்புகளால் வளமூட்டிய எழுத்தாளர் திரு.மணவை முஸ்தபா அவர்கள் தற்போது முழுமையாக பேசவோ, எழுந்து செயல்படவோ இயலாத நிலையில் உடல்நலம் குன்றியுள்ளார் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு திரு மணவை முஸ்தபா அவர்கள் அனுப்பியுள்ள 10.3.2010ம் நாளிட்ட கடிதத்தில் அவரால் முழுமையாக பேசவோ எழுந்து செயல்படவோ இயலாத நிலையில் இருந்து வருவதாகவும் அவருடைய மருத்துவ செலவுக்கு உதவுவதற்காக அவர் படைத்த அறிவியல் தமிழ் மற்றும் கணிணிக் கலைக் களஞ்சியம்

உள்ளிட்ட 42 நூல்களை தனி நேர்வாக கருதி நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்கி உதவி கேட்டுக்கொண்டுள்ளார் என்றும் இவருக்கு பரிவுத்தொகை வழங்கும்வகையில் ஆணை வெளியிடலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

4. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து எழுத்தாளர் திரு.மணவை முஸ்தபா அவர்களின் தமிழ்ப் பணியினையும், அவரால் முழுமையாக பேசவோ எழுந்து செயல்படவோ இயலாத நிலையில் இருந்து வருவதால் அவருடைய மருத்துவ செலவுக்கு உதவுவதற்காக தனி நேர்வாகக் கருதிப் பார்த்து, தமிழறிஞரின் படைப்புக்களை நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், திரு. மணவை முஸ்தபா படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகையாக ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவு – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை
> (த.தொ.கு.2202 05 800 JE 0933)

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை 2009–10–ம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்திலேயே மேற்கொள்ளப்படும்.

7. மேலே பத்தி 4–இல் ஒப்புவிக்கப்பட்ட தொகைக்கான பட்டியல் உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600001 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.84/து.செ (பூ.மா)/2010, நாள் 31.03.2010–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
திரு. மணவை முஸ்தபா, எழுத்தாளர்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.

<u>நகல்</u>

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (து.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II) துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சா. முத்துலிங்கம் 31/3/10
பிரிவு அலுவலர்

<u>தமிழ்நாடு அரசு</u>

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2010–11–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – 22 தமிழ்ச் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை</u>

அரசாணை (நிலை) எண்.156

நாள்: 07.05.2010
திருவள்ளுவராண்டு 2041
சித்திரை 24

<u>படிக்க:</u>

1. தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.2917/தமிழ்–1/2010, நாள் 26.3.2010

========

<u>ஆணை</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2010–11–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"இந்த ஆண்டு 1. பேராசிரியர் அ. மு. பரம சிவானந்தம், 2. பேராசிரியர் அ. கிருஷ்ணமூர்த்தி, 3. டாக்டர் எஸ். எம். கமால், 4. திரு. ப. இராமசாமி, 5. பேராசிரியர் ர.சீனிவாசன், 6. திரு.வ.சு.செங்கல்வராய பிள்ளை, 7. கவிஞர் வெள்ளியங்காட்டான், 8. திரு. நெ.து. சுந்தரவடிவேலு, 9. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், 10. மயிலை சிவமுத்து, 11. திரு. காழிசிவகண்ணுசாமி பிள்ளை, 12. திரு. கே. பி. நீலமணி, 13. கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியன், 14. திரு. அ. திருமலை முத்துசாமி, 15. திரு. நவராஜ் செல்லையா, 16. திருகூட சுந்தரம், 17. பேராசிரியர் சுந்தரசண்முகனார், 18. தஞ்சை ராமையாதாஸ், 19. கவிஞர் தாராபாரதி, 20. திரு. அருதனக் குட்டி அடிகளார், 21. திருமதி சரோஜா இராமமூர்த்தி, 22. திரு. அ. சீனிவாசன் ஆகிய 22 தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை, அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமைபருக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும்"

2. மேலே கண்ட அறிவிப்பிற்கிணங்க, 22 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கிய படைப்புகளை நாட்டுடைமையாக்கி உரிய பரிவுத் தொகையை வழங்க அரசு நிலையில் அறுதி செய்யலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, இவ்வரசாணையின் இணைப்பில் காணும் 22 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு

பரிவுத்தொகையாக ஒவ்வொருவரின் மரபுரிமையர்களுக்கும் இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கும் பொருட்டு ரூ.1,47,00,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஏழு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.1,47,00,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தி ஏழு இலட்சம் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(த.தொ.கு. 2202 05 800 JE 0933)

5. மேலும், பரிவுத் தொகையைப் பெறவரும் மரபுரிமையர்களின் குடும்பத்தினர் சென்னை வந்து செல்லும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்துக்காக ஒவ்வொரு தமிழறிஞரின் மரபுரிமையருக்கும் ரூ.5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 22 பேருக்கு ரூ.1,10,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு.2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள 2010–11–ம் ஆண்டுக்கான வரவு–செலவு மதிப்பீட்டில் ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது பரிவுத் தொகை வழங்கப்படவுள்ள 22 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு மேலே தெரிவிக்கப்பட்டுள்ள ரூ.1,00,00,000/–க்கு அதிகமாக தேவைப்படும் கூடுதல் நிதி ஒதுக்கம் ரூ.47,00,000/– (ரூபாய் நாற்பத்தி ஏழு இலட்சம் மட்டும்) மற்றும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்திற்கான ரூ.1,10,000/–த்தினையும் 2010-2011-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான தொகையினை 2010-2011-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

9. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.17/இ.செ (பூ.மா)/2010, நாள் 7.5.2010–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.114 (நூற்று பதினான்கு)–உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
22 தமிழறிஞர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/5/10
பிரிவு அலுவலர்.

7/5/10

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண். 156, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ1–1) துறை, நாள் 07.05.2010**

| வ. எண் | தமிழ் சான்றோர்களின் பெயர் திருவாளர்கள் | ஒப்பளிக்கப்பட்ட பரிவுத் தொகை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | பேராசிரியர் அ. மு. பரம சிவானந்தம், | ரூ.10.00 இலட்சம்<br>(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 2. | பேராசிரியர் அ. கிருஷ்ணமூர்த்தி | ரூ.10.00 இலட்சம்<br>(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 3. | டாக்டர் எஸ். எம். கமால் | ரூ.7.00 இலட்சம்<br>(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) |
| 4. | திரு. ப. இராமசாமி | ரூ.6.00 இலட்சம்<br>(ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) |
| 5. | பேராசிரியர் ர. சீனிவாசன் | ரூ.7.00 இலட்சம்<br>(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) |
| 6. | திரு.வ.சு.செங்கல்வராய பிள்ளை | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 7. | கவிஞர் வெள்ளியங்காட்டான் | ரூ.3.00 இலட்சம்<br>(ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) |
| 8. | திரு. நெ.து. சுந்தரவடிவேலு | ரூ.10.00 இலட்சம்<br>(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 9. | டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் | ரூ.7.00 இலட்சம்<br>(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) |
| 10. | மயிலை சிவமுத்து | ரூ.10.00 இலட்சம்<br>(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 11. | திரு. காழிசிவகண்ணுசாமி பிள்ளை | ரூ.6.00 இலட்சம்<br>(ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) |
| 12. | திரு. கே. பி. நீலமணி | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 13. | கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியன் | ரூ.6.00 இலட்சம்<br>(ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) |
| 14. | திரு. அ. திருமலை முத்துசாமி | ரூ.7.00 இலட்சம்<br>(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) |
| 15. | திரு. நவராஜ் செல்லையா | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |

| | | |
|---|---|---|
| 16. | திருகூட சுந்தரம் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 17. | பேராசிரியர் சுந்தரசண்முகனார் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 18. | தஞ்சை ராமையாதாஸ் | ரூ.6.00 இலட்சம்<br>(ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) |
| 19. | கவிஞர் தாராபாரதி | ரூ.7.00 இலட்சம்<br>(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) |
| 20. | திரு. அருதனக் குட்டி அடிகளார் | ரூ.7.00 இலட்சம்<br>(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) |
| 21. | திருமதி சரோஜா இராமமூர்த்தி | ரூ.7.00 இலட்சம்<br>(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) |
| 22. | திரு. அ. சீனிவாசன் | ரூ.6.00 இலட்சம்<br>(ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) |

க. முத்துசாமி,
அரசுச் செயலாளர்.

/ உண்மை நகல் /

7/5/10

பிரிவு அலுவலர்.

7/5/10

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (துவ 1–1) துறை

அரசாணை (நிலை) எண்.254

நாள் 23.06.2010
திருவள்ளுவராண்டு 2041
ஆனி 9

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.3689/தமிழ்–1/2010, நாள் 13.4.2010

========

**ஆணை:**

தமிழ் வளர்ச்சி இயக்குநர், மேலே படிக்கப்பட்ட அவரது கடிதத்தில், இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்கள் 1882–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்து, 16.2.1954–இல் மறைந்தார் என்றும், இவர் 1915–இல் திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கியவர் என்றும், ‘வட்டத் தொட்டி’ என்னும் இலக்கியச் சங்கத்தை நிறுவிப் பழந்தமிழ்ச் செய்யுட்களையும், கலைகளையும் அருமையாக விளக்கி தமிழுக்குத் தொண்டாற்றி வந்தவர் என்றும், 1927 முதல் 1930 வரை ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் சென்னை மேலவை சட்ட உறுப்பினராக இருந்தவர் என்றும், இவர் எங்கு சென்றாலும் தமிழ் மொழியின் பெருமைகளையும் தமிழ்நாட்டில் கலைகளின் சிறப்புகளையும் எடுத்துக் கூறுவார் என்றும், ஆங்கிலப் பற்றுடைய பலர் இவரால் தமிழ்த் தொண்டர்களாயினர் என்றும், பரத நாட்டியத்திற்கும், தமிழிசைக்கும் தமிழ் ஓவியம் முதலான தமிழரின்கலைகளுக்கும் ஒரு புதிய விழிப்புணர்வை உண்டாக்கியவர் என்றும், அவர் வாழ்வில் பெரும்பகுதியைக் கம்பராமாயணத்தைத் தமிழ் மக்கள் சுவைக்குமாறு செய்வதிலேயே கழித்தவர் என்றும், ‘கல்கி’ இதழில் ‘கம்பர் தருங்காட்சி’ எனப் பெயரிட்டு நீண்ட காலம் கம்பராமாயண செய்யுட்களின் சுவைகளை விளக்கி வந்தவர் என்றும், இவர் கம்பர் தரும் இராமாயணம் (மூன்று பாகங்கள்), முத்தொள்ளாயிரம் உரை ஆகிய நூல்களைப் பதிப்பித்தும், கம்பர் யார்?, இதய ஒலி, அற்புதரசம், கம்பர் தரும் காட்சிகள், தமிழ்க் களஞ்சியம் முதலிய பல நூல்களைப் படைத்தும் தமிழில் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர் என்றும் தெரிவித்துள்ளார்.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநர், இவ்வகையில் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்த்த தமிழறிஞர் இரசிகமணி டி.கே.சி. அவர்களின் நூல்கள் அனைத்தையும், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத்தொகை வழங்கும் வகையில் ஆணை வெளியிடலாமெனவும், வழங்கப்படவுள்ள பரிவுத் தொகையை அரசு நிலையில் முடிவு செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இப்பரிவுத் தொகையினைப் பெறவரும் இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களின் மரபுரிமையர்கள் சென்னை வந்து செல்ல தேவைப்படும் போக்குவரத்து / ஏனைய செலவினத்தை மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் -- II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித் தொகை''
(த.தொ.கு.2202 05 800 JE 0933)

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு.2202 05 800 JE 0522)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதிபொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதிபொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதிபொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.34091/நிதி (தவ.அநி (ம) செ)/ 2010, நாள் 21.6.2010–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.331 (முந்நூற்று முப்பத்து ஒன்று) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களின் மரபுரிமையர்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.

நகல்

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 23/2/10

# <u>தமிழ்நாடு அரசு</u>

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – தமிழ்நாடு அரசு 2009–10–ம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பு –தமிழறிஞர் ஜே.ஆர்.ரங்கராஜு அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை</u>

அரசாணை (நிலை) எண்.290

நாள் 15.07.2010
திருவள்ளுவராண்டு 2041
ஆனி 31

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசாணை (நிலை) எண்.119, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (த.வ.1–1)த் துறை, நாள் 2.6.2009

<u>படிக்க:</u>

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.1007/தமிழ்1/ 2009, நாள் 03.05.2010

=======

<u>ஆணை</u>

தமிழ்நாடு அரசின் 2009–10–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 28 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்க அறிவிக்கப்பட்டது. அவற்றுள் தமிழறிஞர் திரு.ஜே.ஆர்.இரங்கராஜு அவர்களின் நூல்களும் நாட்டுடைமையாக்க அறிவிக்கப்பட்டது.

2. தமிழறிஞர் திரு.ஜே.ஆர்.ரங்கராஜு அவர்களின் மரபுரிமையர்கள் தொடர்பான அறிக்கை, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டது என்றும், மரபுரிமையர்கள் நாட்டுடைமையாக்குதலுக்கு இசைவளித்துள்ளதாலும், தமிழறிஞர் ஜே.ஆர்.ரங்கராஜு அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியும் உரிய மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்படலாம் என்று தமிழ் வளர்ச்சி இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார். மேலும், அவர் திரு.ஜே.ஆர்.ரங்கராஜு அவர்கள் பின்வரும் நூல்களை படைத்துள்ளார் என்றும் தெரிவித்தள்ளார்:–

1. இராஜாம்பாள்
2. மோகனசுந்தரம்
3. சந்திரகாந்தா
4. ஆனந்தகிருஷ்ணன்
5. இராஜேந்திரன்
6. ஜெயரங்கன்
7. வரதராஜம்
8. விஜயராகவன்

3. தமிழ்நாடு அரசு, 2008–09–ஆம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பில் அறிவித்தவாறு தமிழறிஞர் ஜே.ஆர்.ரங்கராஜு அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்க அரசு ஆணையிடுகிறது. அதனடிப்படையில் அவரது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வழங்க நிதி ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பரிவுத்தொகையினை பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித் தொகை
(த.தொ.கு. 2202 05 800 JE 0933)

5. நாட்டுடைமையாக்கப்பட்டமைக்குரிய பரிவுத் தொகை பெறவரும் மரபுரிமையர்களின் குடும்பத்தாருக்கு சிறப்பு செய்யும் பொருட்டு காசோலை உறை, சென்னை வந்து செல்ல போக்குவரத்து செலவு, சிற்றுண்டி, மதிய உணவு ஆகியவற்றை வழங்கவும் மற்றும் பிற சில்லறை செலவினங்களை மேற்கொள்ள அரசு ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"2202. பொதுக்கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800 ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலக செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு. 2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், பத்தி 3 மற்றும் 5–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மேலே ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

9. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.2/துசெ (ட்டி.எஸ்.எம்)/2010, நாள் 15.7.2010–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.505 (ஐநூற்று ஐந்து) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
தமிழறிஞர் ஜே.ஆர். ரங்கராஜுவின் மரபுரிமையர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./வ.செ.பொ II) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/7/10
அரசு சார்பு செயலாளர்.
வ.சு
15/7/10

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – ஏ.கே.வேலன் அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை

அரசாணை (நிலை) எண்.411

நாள் 14.10.2010
திருவள்ளுவராண்டு 2041
புரட்டாசி 28

படிக்க:-

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.8339/தமிழ்1/ 2009, நாள் 02.09.2010

========

ஆணை

தமிழ் வளர்ச்சி இயக்குநர், மேலே படிக்கப்பட்ட அவரது கடிதத்தில், திரு.ஏ.கே.வேலன் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் ஆலங்குடி எனும் கிராமத்தில் 24.10.1921–இல் பிறந்தவர் என்றும், இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் குழந்தை வேலன் என்றும், பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த இவர், ஆசிரியர் பயிற்சி முடித்து, கரந்தை தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார் என்றும், பகுத்தறிவு கொள்கையில் ஈர்க்கப்பட்டு, பகுத்தறிவு கொள்கைகளைப் பரப்பும் விதமாக எரிமலை, ஞாயிறு போன்ற நாளிதழ்களை நடத்தியவர் என்றும், தமிழக அரசால் கலைமாமணி விருது வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டவர் என்றும், இவர் 7.11.2006–இல் மறைந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்த்த தமிழறிஞர் ஏ.கே.வேலன் அவர்களின் நூல்கள் அனைத்தையும், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், நாட்டுடைமையாக்கி, அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத்தொகை வழங்கும் வகையில் ஆணை வெளியிடலாமெனவும், வழங்கப்படவுள்ள பரிவுத் தொகையை அரசு நிலையில் முடிவு செய்யலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழறிஞர் ஏ.கே.வேலன் அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க, ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இப்பரிவுத் தொகையினைப் பெறவுள்ள தமிழறிஞர் ஏ.கே.வேலன் அவர்களின்

மரபுரிமையர்கள் சென்னை வந்து செல்ல தேவைப்படும் போக்குவரத்து / ஏனை செலவினத்தை மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை''
(த.தொ.கு.2202 05 800 JE 0933) – (ரூ.2,00,000/–)

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு.2202 05 800 JE 0522) – (ரூ.5,000/–)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அறி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ், முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.58061/நிதி (துவ.அநி (ம) செ.)/ 2010, நாள் 12.10.2010-ல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1116 (ஆயிரத்து நூற்று பதினாறு)—உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. சிவகுமார்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை—8.
✓தமிழறிஞர் ஏ.கே.வேலன் அவர்களின் மரபுரிமையர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை—1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை—18/35.
நகல்
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை—9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9.
நிதி (து.வ.அநி (ம) செ./ வ.செ.பொ II)துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 15/10/10.
வ.சு
15-10-10

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை

அரசாணை (நிலை) எண்.463

நாள்: 9.12.2010
திருவள்ளுவராண்டு 2041
கார்த்திகை 23

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.10513/தமிழ்1/ 2010, நாள் 13.10.2010

========

ஆணை

தமிழ் வளர்ச்சி இயக்குநர், மேலே படிக்கப்பட்ட அவரது கடிதத்தில், மறைந்த தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குமாறு அவரது மனைவி திருமதி.சீ.மோகனாம்மாள் வேண்டியுள்ளார் என்றும், தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களுக்கு அரசு நிதியுதவி வழங்கக் கருதும் நேர்வில் தமிழ் வளர்ச்சித் துறையில் செயற்படுத்தப்பட்டுவரும் திட்டமான தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் கருதிப் பார்க்கலாம் என்றும், தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தில் உள்ள தென்னலக்குடி எனும் ஊரில் 1920–இல் பிறந்தவர் என்றும், இவர் 1946–ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியப் பணியைத் தொடங்கி 33 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி பேராசிரியராக உயர்ந்தவர் என்றும், தாவரவியலில் புகழ்மிக்கப் பேராசிரியராக விளங்கியதுடன், இயற்கைத் தாவரங்கள் ஆராய்ச்சியில் உலகம் போற்றும் பேராசிரியராகத் திகழ்ந்தவர் என்றும், இவர் தாவரம் வாழ்வும், வரலாறும், சங்க இலக்கியத் தாவரங்கள் போன்ற நூல்களை எழுதியுள்ளார் என்றும், 2.11.1990–இல் இயற்கை எய்தினார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநர், இவ்வகையில் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்த்த தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் நூல்கள் அனைத்தையும், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், நாட்டுடைமையாக்கி, அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத்தொகை வழங்கும் வகையில் ஆணை வெளியிடலாமெனவும், வழங்கப்படவுள்ள பரிவுத் தொகையை அரசு நிலையில் முடிவு செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இப்பரிவுத் தொகையினைப் பெறவரும் தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் மரபுரிமையர்கள் சென்னை வந்து செல்ல தேவைப்படும் போக்குவரத்து / ஏனைய செலவினத்தை மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்ப செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
(த.தொ.கு.2202 05 800 JE 0933) – ரூ.5,00,000/–

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு.2202 05 800 JE 0522) - ரூ.5,000/–

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ், முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.16/இசெ (ப்பி.ஆர்.)/ப்பி/2010, நாள் 9.12.2010–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரடு எண்.1507 (ஆயிரத்து ஐந்நூற்று ஏழு)உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. சிவகுமார்,
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் மரபுரிமையர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

9/12/10

பிரிவு அலுவலர்.

9.12.10